### அரசு மருத்துவக் கல்லூரிகளில் வசதி வாய்ப்புள்ளோர்க்கு மட்டும் வாய்ப்புக் கிடைப்பதை தடுக்கும் கூட்டுக் கடமை நமக்கு உள்ளது!

# மருத்துவக் கல்வி முறையை பலவீனப்படுத்தும் முயற்சி கண்டிக்கப்பட வேண்டும்!

## ‘நீட்’ தேர்வுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து – மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி கடிதம்!

**சென்னை, ஜூலை 16-**

**‘நீட்’ தேர்வுக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுத்து வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள், தமது நன்றியைத் தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ளார்.**

**அக்கடிதத்தில் ராகுல் காந்தி அவர்கள், “மக்களின் வரிப்பணத்தில் நடத்தப்படும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் வசதி வாய்ப்புள்ள சிலருக்கு மட்டும் வாய்ப்புக் கிடைப்பதை தடுக்கும் கூட்டுக் கடமை நமக்கு உள்ளது” என்று குறிப்பிட்டுள்ளார்.**

**மேலும் அக்கடிதத்தில் “வலுவான பொது மருத்துவக் கல்வி முறையை பலவீனப் படுத்தும் எந்தவொரு முயற்சியும் கட்டாயம் கண்டிக்கப்பட வேண்டும்!” என்றும் ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.**





மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல்காந்தி அவர்கள் ‘நீட்’ தேர்வு தொடர்பாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதம்பின்வருமாறு:-

ஜூன் 28, 2024 தேதியிட்ட உங்கள் கடிதத்திற்கு நன்றி.

நீட் தேர்வு நமது உயர்கல்வி அமைப்பில் உள்ள அப்பட்டமான குறைபாடுகளை அம்பலப்படுத்தியுள்ளது. தேசிய அளவிலான மையப்படுத்தப்பட்ட தேர்வு முறை விளிம்பு நிலை மாணவர்கள் மீது உண்டாக்கும் பாதிப்பு குறித்தும் இது கவனத்தை ஈர்த்துள்ளது.

குறிப்பாக, ஜூன் 4, 2024 அன்று ‘நீட்’ இளநிலை முடிவுகள் குறித்த தேதிக்கு முன்னரே வெளியான பிறகு, மாணவர்களின் நீதிக்காகக் காங்கிரஸ் கட்சி போராடி வருகிறது. ஒன்றிய அரசு மற்றும் தேசிய தேர்வு முகமையின் பெருந்தோல்வியால் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான மாணவர்களைக் கடந்த ஒரு மாதத்தில் சந்தித்தேன். 24 லட்சம் மாணவர்களுக்கு விரைவில் நீதி கிடைக்க வேண்டும்.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது நான் ஆற்றிய உரையும், ‘நீட்’ தேர்வால் ஏழை மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து கவனத்தை ஈர்த்தது. தனியார் பயிற்சி நிறுவனங்களுக்குச் செல்ல முடியாததும் - பிற வசதிவாய்ப்புகள் இல்லாததும் கிராமப்புறத்தில் உள்ள திறமையான மாணவர்கள் சமவாய்ப்புடன் போட்டி போட முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இது நம்முடைய பொதுக் கல்வி நெறிமுறைகளுக்கு எதிரானது ஆகும்.

மக்களின் வரிப்பணத்தில் நடத்தப்படும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் வசதிவாய்ப்புள்ள சிலருக்கு மட்டும் வாய்ப்பு கிடைப்பதைத் தடுக்கும் கூட்டுக் கடமை நமக்கு உள்ளது. பொது மருத்துவக் கல்வி முறையைக் கட்டமைப்பதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக உள்ளது. இதன் விளைவாக வலுவான பொது சுகாதார அமைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது. இதைப் பலவீனப்படுத்தும் எந்தவொரு முயற்சியும் கட்டாயம் கண்டிக்கப்பட வேண்டும்.

> **“பொது மருத்துவக் கல்வி முறையைக் கட்டமைப்பதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக உள்ளது. இதன் விளைவாக தமிழ்நாட்டில் வலுவான பொது சுகாதார அமைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது.”**

தங்களின் கடிதத்துக்காக மீண்டும் ஒருமுறை நன்றி. விரைவில் தங்களைச் சந்திக்க ஆவலுடன் காத்திருக்கிறேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் ராகுல் காந்தி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### ஆட்சியர் மருத்துவர் ச.உமா தலைமை! கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. முன்னிலை !

# ரூ. 2.90 கோடி மதிப்பில் 4 புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் திறந்து வைத்தார்!

*நாமக்கல், ஜூலை 16-*

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், ஓ.சௌதாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பெட்ரோல் விற்பனை நிலையம் திறப்பு விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு ஓ.சௌதாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பெட்ரோல் விற்பனை நிலையத்தையும்,

ரூ. 25 லட்சம் மதிப்பில் அணைப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க சேமிப்பு கிடங்கு, மங்களபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பலநோக்கு சேவை மையங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ் ரூ.75.00 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள வேளாண் வணிக மையத்தையும், முள்ளுக் குறிச்சி ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் வேளாண் வணிக மையத்தையும் திறந்து வைத்து வேளாண்மை துறையின் சார்பில் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் ஆன மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டுவந்துள்ள மண்ணுயிர் காத்து மண்ணுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பசுந்தாள் உர விதைகள், 45 ஏக்கருக்குரிய 900 கிலோ தக்கைபூண்டு விதைகள் வழங்கி அமைச்சர் மா.மதிவேந்தன் சிறப்புரையாற்றினார்.

அவர் பேசுகையில், நாமக்கல் மாவட்டத்தில் கூட்டுறவு சங்கத்தின் மூலம் திறந்து வைக்கப்படும் 6 வது பெட்ரோல் விற்பனை நிலையம். ஓ.சௌதாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் ரூ.8.23 கோடி மதிப்பில் பயிர் கடன், கால்நடை பராமரிப்பு கடன், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன், நகை கடன் உள்ளிட்ட கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் ரூ.53.46 இலட்சம் கடனுதவியும், கூட்டுறவு சங்கத்தின் மூலம் நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் சுமார் ரூ.1,500 கோடி கடனுதவியும் வழங்கப்பட்டுள்ளது. ஏழை, எளிய மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதில் கூட்டுறவு சங்கம் மிக முக்கிய பங்காற்றுகிறது.

இக்கூட்டுறவு சங்கத்தில் 1,100 உறுப்பினர்கள் உள்ளனர். அரசின் அனைத்து திட்டங்களையும் பொதுமக்கள் பயன்படுத்தி கொண்டு தங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும் என அமைச்சர் மா.மதிவேந்தன் தெரிவித்தார்.

இம்முகாமில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தெரிவித்ததாவது,

கூட்டுறவு சங்கம் முதன் முதலாக இங்கிலாந்து நாட்டில் யார்க்ஷயர் மற்றும் லங்காஷயர் சகோதரர்களால் தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து உலகளவில் மிக பெரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. நம் இந்திய நாட்டின் வளர்ச்சிக்கு கூட்டுறவு துறை மிக முக்கிய பங்காற்றி வருகிறது. கூட்டுறவு சங்கங்கள் என்பது அரசு சார்பு நிறுவனம் ஆகும். அரசு நலத் திட்ட பணிகளை மேற்கொள்ளவது போல கூட்டுறவு அமைப்புகளும் அரசிற்கு இணையாக பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. விவசாய வளர்ச்சியில் கூட்டுறவு துறையின் பங்கு இன்றியமையாதது ஆகும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு முதன் முதலாக கூட்டுறவு சங்கங்களில் விவசாய கடன்களை தள்ளுபடி செய்தார். 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான ஆட்சிக் காலத்தில் சுமார் ரூ.7,500/ கோடி கூட்டுறவு கடன்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். அதுமட்டுமின்றி தள்ளுபடி செய்த தொகையினை கூட்டுறவு சங்கங்கள் தொடர்ந்து சிறப்பாக செயல்பட அரசே கூட்டுறவு சங்கங்களுக்கு செலுத்த உத்தரவிட்டார்.

நாமக்கல் தனி மாவட்டமாக உருவாக்கப்பட்ட பிறகு மத்திய கூட்டுறவு வங்கி தோற்றுவிக்கப்படாமல் இருந்தது. சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாட்டு பகுதியில் உள்ள நாமக்கல் மாவட்டதிற்கென ஒரு புதிய மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி உருவாக்கிட வேண்டும் என்பது இம்மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கை ஆகும். இக்கோரிக்கையின் அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து, நாமக்கல் மாவட்டத்திற்கென பிரத்தியேகமாக ஒரு புதிய மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியை உருவாக்கி உத்தரவிட்டுள்ளார். மேலும், போதமலைக்கு ரூ.140.00 கோடியில் சாலை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இராசிபுரம், வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை மற்றும் புதுச்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளில் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்யும் வகைளில் சுமார் ரூ.800 கோடி மதிப்பீட்டில் மாபெரும் கூட்டு குடிநீர் திட்டத்தை நிறைவேற்றி உள்ளார்கள். வரும் பொங்கல் பண்டிகைக்குள் கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் முடிவுற்று 24 மணி நேரமும் பாதுகாக்கப்பட்ட சுகாதரமான குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்படும். பொது விநியோக கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு தரமான பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது என கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி தெரிவித்தார்.

தொடர்ந்து இம்முகாம்களில் இராசிபுரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் கே.பி.ஜெகநாதன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஏ.ஆர்.துரைசாமி, வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் ஆர்.எம்.துரைசாமி, இணை பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள் க.பா.அருளரசு, நாமக்கல் சரக துணைப்பதிவாளர் சே.ஜேசுதாஸ், தி.மு.க. மாவட்ட விவசாய தொழிலாளர்களின் அமைப்பாளர் கே பி சண்முகம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழக முதல்வரின் கனவு திட்டமான காலை சிற்றுண்டித் திட்டத்தை பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தனது தொகுதிக்குட்பட்ட அசூர் ஊராட்சியில் அரசு உதவி பெறும் பள்ளியில் திட்டத்தினை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட மகளிர் திட்ட இயக்குனர் ரமேஷ் குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணப்பிரியா, மாவட்ட கல்வி அலுவலர் பேபி, மற்றும் பள்ளி தாளாளர் கார்த்திகேயன், தலைமை ஆசிரியர் சுமதி, உட்பட மாவட்ட வருவாய் அலுவலர் ராஜலட்சுமி, தாசில்தார் ஜெயபிரகாசம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நரசிம்மன் ஸ்ரீதர் , தலைமை செயற்குழு உறுப்பினர் சேகரன் திருவெறும்பூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கங்காதரன், வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கருணாநிதி, ஒன்றிய குழு தலைவர் சத்யா கோவிந்தராஜ், அசூர் ஊராட்சி மன்ற தலைவர் ராணி குமரகுரு உட்பட கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் என ஏராளமானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் அரசு உதவி பெறும் பள்ளிகளில் விரிவுபடுத்தப்படுத்தும் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து நாமக்கல் மாவட்டத்தில் வெண்ணந்தூர் ஒன்றியம் தேங்கல்பாளையம் காந்தி கல்வி நிலையம் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் குழந்தைகளுக்கு உணவு வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா, வெண்ணந்தூர் ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.எம்.துரைசாமி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ஏ.ஆர்.துரைசாமி, பள்ளி செயலாளர் செ.வினோபாஜி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

# விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. அமோக வெற்றி!

## தியாகதுருகத்தில் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. இனிப்பு வழங்கினார்!

*கள்ளக்குறிச்சி, ஜூலை 16-*

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் திமுக 67,757 வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றது, அதனைக் கொண்டாடும் விதமாக கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் பேருந்து நிலையம் முன்பு தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன் தலைமையில் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் பட்டாசு வெடித்து பல்வேறு வாழ்த்து கோஷங்கள் எழுப்பி பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள்.

மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் நமது திராவிட மாடல் ஆட்சியில் மக்களுக்கு பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதல்வர், சமூக நீதி காவலர்,கழகத் தலைவர்,திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார், அவரது வழியில் கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அதனை திறம்பட மக்களிடத்தில் கொண்டு சேர்ந்து வருகிறார், ஆகையால் நன்றி மறவாமல் விக்கிரவாண்டி தொகுதி வாக்காளர்கள் திமுக வேட்பாளர் அன்னியூர் சிவாவை வெற்றி பெற செய்துள்ளார்கள், மேலும் எதிர்க்கட்சிகள் பல்வேறு விமர்சனங்கள் முன்வைத்தாலும் அதனை சிறிதும் கண்டு கொள்ளாமல் வாக்காளர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து உள்ளனர், இந்த வெற்றியானது வருகின்ற 2026 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் சட்டமன்ற தேர்தலில் நமது திராவிட மாடல் அரசுக்கு மக்களின் ஆதரவு தொடர்ந்து இருப்பதை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இதில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் புவனேஸ்வரி பெருமாள், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் தாமோதரன்,ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், அண்ணாதுரை பேரூராட்சி மன்ற தலைவர் வீராசாமி, துணைத்தலைவர் சங்கர், நகர துணை செயலாளர் அக்பர் உசேன்,பரசுராமன், ஒன்றிய கவுன்சிலர்கள், பேரூராட்சி வார்டு கவுன்சிலர்கள், மாவட்ட ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகி கள் உள்பட பலர் உடன் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் அரசு உதவி பெறும் பள்ளிகளில் விரிவுபடுத்தப்படுத்தும் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து நாமக்கல் மாவட்டத்தில் எருமப்பட்டி ஒன்றியம் ரெட்டிபட்டி பாரதி அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி, எருமப்பட்டி ஒன்றியக் கழகச் செயலாளர் பாலசுப்பிரமணியம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் நல்லாட்சியில் முத்தான திட்டங்களில் காலை உணவு திட்டம். இத்திட்டத்தினை விரிவுபடுத்தும் வகையில் திருவள்ளூர் மாவட்டத்தில் அரசு உதவி பெறும் பள்ளியில் தொடங்கி வைத்தார். அதேபோல் தளி ஊராட்சி ஒன்றியம் மதகொண்டப்பள்ளி நமது மாதா துவக்கப்பள்ளியில் இத்திட்டத்தினை கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் தளி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன், துவக்கி வைத்தனர். உடன் ஒன்றிய குழு தலைவர் சீனிவாசலு ரெட்டி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மஞ்சுநாத், ஒன்றிய குழு உறுப்பினர் சுரேஷ், அரசு அதிகாரிகள், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.